

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து நேற்று முன்தினம் (10.06.2024) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப்குமார், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், நகர பொறியாளர் சிவபாதம், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மாநகராட்சி அலுவலர்கள், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நாகப்பா மருதப்பபெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவ – மாணவிகளுக்கான சிறப்பு ஆதார் முகாமினை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித்,முதன்மைக்கல்வி அலுவலர் பாலு முத்து ஆகியோர் உள்ளனர்.

### ஜூன் 15ஆம் தேதி கோவையில் கழகத்தின் சார்பில் முப்பெரும் விழா பொதுக்கூட்டம்

# சிவகங்கை மாவட்ட தி.மு.க.வினர் திரளாக பங்கேற்பீர்!

## சிவகங்கை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர் .பெரிய கருப்பன் வேண்டுகோள்

சிவகங்கை. ஜுன் 12-

சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறி உள்ளதாவது. நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் இந்தியாவே வியக்கும் வகையில் தமிழகத்தில் கழகத்தலைவர் முதல்வர் தலைமையிலான 'இந்தியா' கூட்டணி கட்சி சார்பில்போட்டியிட்ட புதுவை உட்பட 40 தொகுதிகளிலும் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். இந்த இமாலய வெற்றியினை தந்த தமிழக மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கழகத் தலைவர் தளபதி அவர்கள் உத்தரவின்படி வருகிற ஜுன் 15ஆம் தேதிசனிக் கிழமை மாலையில் கோவை மாநகர் கொடிசியாவில் முப்பெரும் விழா பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது .இந்த முப்பெரும்விழா பொதுக் கூட்டத்தில் 'இந்தியா' கூட்டணி கட்சித் தலைவர்கள் கூட்டணி சார்பில் வெற்றி பெற்ற 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கிறார் கள். இந்த முப்பெரும் விழா பொதுக்கூட்டத் தில் கழகத்தலைவர் முதல்வர் அவர்கள் 40 தொகுதிகளில் இண்டியா கூட்டணி வேட்பாளர்களை வெற்றிபெற வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து சிறப்புரை ஆற்றுகிறார். முதல்வர் தளபதி அவர்களின் எழுச்சி மிகுந்த உரையினை கேட்பதற்காக சிவகங்கை மாவட்டத்தில் இருந்து மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பேரூர், நகர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கலந்து கொண்டு சிறப்பித்திடு மாறு கேட்டுக்கொள்கிறேன். எனவே மாவட்டத்திலிருந்து அனைவரும் 15ம்தேதி திரளாக கோவை மாநகரை நோக்கி செல்வோம்.

இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஜூன் 15 இல் கோவையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் முப்பெரும் விழா!

# தஞ்சை வடக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

## மாவட்டச் செயலாளர் - சு.கல்யாணசுந்தரம் எம்.பி. வேண்டுகோள்!



தஞ்சாவூர், ஜுன் 12-

ஜுன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும் "முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்" தஞ்சை வடக்கு மாவட்ட திமுக சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துக்கொள்ள வேண்டுமென மாவட்ட தி.மு.க. செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அது வருமாறு :

வருகின்ற ஜுன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் "முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்" தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், அக்கூட்டத்தில் தஞ்சை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக்குழு நிலைக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி , அமைப்புச்சார ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### அமைச்சர் கே.ஆர் .பெரிய கருப்பன் நடத்தி வைத்தார்

# காரைக்குடியில் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ் .ரவி மகள் திருமணம்!

## அமைச்சர் எஸ். ரகுபதி-தவத்திரு குன்றக்குடி அடிகளார் - மு.தென்னவன் வாழ்த்துரை!

சிவகங்கை, ஜுன் 12-

சிவகங்கை மாவட்டம் பள்ளத்தூரைச் சேர்ந்தவர் கே.எஸ். ரவி. இவர் தலைமை பொதுக்குழு உறுப்பினர்.கே. எஸ்.ரவி திருமதி ருக்மணி ஆகியோரது மகள் ஆர். பூஜா உசிலம்பட்டி உ.மு. வெள்ளைச்சாமி திருமதி ஜெயம் ஆகியோரது புதல்வன் வெ. ரமேஷ் ராஜா ஆகியோரது திருமணத்தை காரைக்குடி பி. எல். பி. பேலசில் கூட்டுறவுத்துறை அமைச்சரும் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளருமான கேஆர். பெரிய கருப்பன் தலைமையேற்று நடத்தி வைத்தார்.

முன்னாள் அமைச்சரும் இலக்கிய அணி புரவலருமான மு.தென்னவன் முன்னிலை வகித்தார். மணமக்களை தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் முரசொலி செய்தி ஆசிரியர் கு.சேது ஆகியோர் வாழ்த்தினார்கள்.

தொடர்ந்து தொழிலதிபர்கள் பழ. படிக்காசு அம்பலம், சூ.சுப.செல்லப் பன் அம்பலம், பொன். பாஸ்கரன் அம்பலம் எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ். மாங்குடி, மாவட்டக் கழக துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன்,கே.எஸ். எம். மணி முத்து, திருமதி ஜோன்ஸ் ருசோ, காரைக் குடி மேயர் எஸ்.முத்துதுரை, துணை மேயர் என்.குணசேகரன், முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப .துரைராஜ், சுப மதியரசன், நகர்கழக செயலாளர்கள் பெரி .பாலா, துரை. ஆனந்த் க.பொன்னுச் சாமி, ஒன்றிய செயலாளர்கள் சுப.சின்னத் துரை, கே.எஸ்.

ஆனந்த், எஸ். சண்முக வடிவேல், எம் .ஜெயராமன் குன்னக்குடி சுப்பிரமணியன், நா. நெடுஞ்செழியன்,லெ.மு. ரவிச்சந்திரன், நாகனி ரவி, வக்கீல் பூபால சிங்கம், யோக. கிருஷ்ண குமார்,பேரூர் கழகச் செயலாளர்கள் அசோக் , பகுருதீன் அலிபாய், பிரமையா, ஆர்.கார்த்திகேயன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் ,துணை அமைப்பாளர் பரணி கிட்டு, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், நிர்வாகிகள் மார்கரெட்கமலா, திலகவதி கண்ணன், தெரசா, மு.மணிமேகலை, முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சீ.இரவி,சுப.முத்துராம லிங்கம், சொ.கண்ணன்,துரை. நாகராஜ், செட்டிநாடு பாலு, ஒன்றிய கவுன்சிலர் சொக்கலிங்கம், பேரூராட்சி தலைவர் திருமதி ராதிகா மாவட்ட இலக்கிய அணி தலைவர் புலிக்குத்தி சீனிவாசன், சேவியர், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், அண்ணாமலை, மற்றும் கழக சார்பு அணி நிர்வாகிகள், அனைத்து கட்சி நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்தினார்கள்.

முன்னதாக முதல் நாள் சனிக்கிழமை நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, சிவகங்கை மாவட்டக் கழக துணைச் செயலாளர் த.சேங்கை மாறன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தினார்கள். மணவிழா ஏற்பாடுகளை பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ். ரவி, திருமதி ருக்மணி, கே. எஸ். ஆர். கார்த்திக், க.தமிழரசி, க. சந்தோஷ், உ.மு. வெள்ளைச்சாமி திருமதி ஜெயம் உ.மு.பழனியப் பன், லதா, உ.ப. ரிலீஸ், ரிதீஷ், உ.ப.பிரஜன் ஆகியோர் செய்திருந்தார்கள்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில்

# கலைஞர் நூற்றாண்டு விழா - மருத்துவ முகாம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார்

குமரி, ஜுன் 12-

முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101வது பிறந்தநாள் தொடக்க விழாவை முன்னிட்டு இலவச மருத்துவ முகாமை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101வது பிறந்தநாள் தொடக்க விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி, மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மற்றும் டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனை இணைந்து நாகர்கோவில், கோட்டார், M.D.B. மஹாலில் வைத்து நடைபெற்ற மாபெரும் இலவச மருத்துவ முகாமினை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு துவக்கி வைத்தார். நிகழ்வில் மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி. ஜெ.ஹெலன் டேவிட்சன், மாநில சிறுபான்மையினர் நல அணி துணை செயலாளர் ஜோசப் ராஜ், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் சுரேஷ், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அமைப்பாளர் ஜி.எம்.எஸ். ஷபிக், நாகர்கோவில் மாநகர செயலாளர் ப. ஆனந்த், ஒன்றிய செயலாளர் பா. பாபு, உட்பட மருத்துவர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101வது பிறந்தநாள் தொடக்க விழாவை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம் – கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர்– நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மருத்துவ முகாமை துவக்கி வைத்தார்.

### மதுரை தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் டி.ஆர்.ரவீந்திரன்!

# தந்தை டி.ராஜேஸ்வரன் சேர்வை மறைவு!

## அமைச்சர் பி.மூர்த்தி- முன்னணியினர் அஞ்சலி



மதுரை, ஜுன் 12-

தி.மு.க.பொதுக்குழு உறுப்பினர் டி.ஆர். ரவீந்திரன் தந்தை உடல் நலக்குறைவால் நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாரது உடலுக்கு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி. மூர்த்தி மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மாநில கழக தலைமை நிர்வாகிகள் பொன்.முத்துராமலிங்கம் வ.வேலுச்சாமி, பெ.குழந்தைவேலு ஆகியோர் நேரில் அஞ்சலி செலுத்தினார். மேலும் இந்நாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கழகப் பகுதி கழக செயலாளர்கள். வட்டக் கழகச் செயலாளர்கள். அணி அமைப்பாளர்கள். மாமன்ற உறுப்பினர்கள் கழக முன்னணியினர் அஞ்சலி செலுத்தினர்.

# திருவொற்றியூரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, ஜுன் 12 -

திருவொற்றியூர் கிழக்கு பகுதி 14(அ) வட்ட கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழாவை வட்டக் கழகச் செயலாளர் மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஏகா.கார்த்திகேயன் ஏற்பாட்டில் பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கபட்டது.

திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னதாக கழக கொடி ஏற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் பின்னர் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார்.

# மானாமதுரையில் பள்ளி மாணவர்களுக்கு

## இலவசநோட்டு பாடப்புத்தகங்கள் தமிழரசி எம்.எல்.ஏ. வழங்கினார்

சிவகங்கை. ஜுன் 12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா கல்குறிச்சி அரசு ஆரம்ப பள்ளியில் தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவின் பேரில் பள்ளி மாணவ-மாணவிகளுக்கு விலையில்லா இலவச பாட நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. பள்ளி மாணவ-மாணவிகளுக்கு இலவச பாட நோட்டுப் புத்தகங்களை வழங்கியும், எண்ணும் எழுத்தும் நிகழ்ச்சியினை துவங்கி வைத்து திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ .நகர மன்ற தலைவர். எஸ். மாரியப்பன் கென்னடி, மானாமதுரை ஒன்றியக்குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, துணை தலைவர் முத்துச்சாமி, வட்டார கல்வி அலுவலர்கள் அ.பால்ராஜ், அமிஸ்தா பானு, ஒன்றிய செயலாளர்கள் துரை. ராஜாமணி. எம்.அண்ணாத் துரை, கடம்ப சாமி, ஒன்றிய கவுன்சிலர் ராதா சிவச்சந்திரன் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் வளர்மதி, உட்பட ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் விராட்டிப்பத்து கிருதம்மாள் நகர் பகுதியில் பழங்காநத்தம் பகுதி67வது வட்டச் செயலாளர் ராஜேஷ் ஏற்பாட்டில் கேக் வெட்டியும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடப்பட்டது தொடர்ந்து அப்பகுதியில் உள்ள பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு புத்தகம் டிபன் பாக்ஸ் மரக்கன்றுகள் உள்ளிட்டவைகளை மாநில பொதுக்குழு உறுப்பினர் வைகை பரமன் பகுதிச் செயலாளர் சுதன் ஆகியோர் வழங்கினார்கள். சௌந்தரராஜன், லோகநாதன், சுந்தர், வேல்முருகன், பாஸ்கர், ரவிமகேஸ்வரன், ஆனந்தகுமார், ராஜா, சிவா, நேதாஜி, தமிழ்ச்செல்வி, அம்சத், ராணி, ஜெயேந்திர பட்டேல், புவனேஸ்வரி ராஜகுமாரி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் எல்லீஸ் நகர் பகுதி இளைஞரணி சார்பாக தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி அவர்களின் அறிவுறுத்தலின் படி இளைஞர் அணி வினோத் ஏற்பாட்டில் துப்புரவு தொழிலாளர்கள் 500 பேருக்கு மதுரை மாநகர் அவை தலைவர் மா.ஒச்சு பாலு மதிய உணவை வழங்கினார். உடன் மாவட்டத் துணைச் செயலாளர்கள் சி.சின்னம்மாள் ஜே.மூவேந்திரன், இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தர்ராஜன், பகுதிச் செயலாளர் பி.கே.செந்தில், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தினேஷ் குமார், ராஜபாண்டி மற்றும் பகுதி கழக இளைஞர்களின் நிர்வாகிகள் உள்ளனர்.